**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 457/2013 P.W. 8/L.W.12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. மீனாள் | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 24.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது குற்ற எண் 25/2012, சட்டப்பிரிவுகள் 498 எ, 406 இ.த.ச. 1860 மற்றும் 3, 4, 6 D.P Act ன் படி வழக்குப் பதிவுச் செய்யப்பட்டு எனது விசாரணைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. பின்னர் 28.09.2012 ம் தேதி 1 வது சாட்சியான உஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை :**

1. முதல் தகவல் அறிக்கை 28.09.2012 அன்று பதிவுச் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 28.09.2012 அன்று மனுதாரர் உஷா அன்றையதினம் எங்கள் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. நீதிமன்ற உத்தரவு படி செய்தோம். மேற்படி தேதிக்கு முன்பு இந்த வழக்கின் மனுதாரர் ஏதேனும் புகார் தந்து விசாரிக்கப்பட்டதா என்றால் - ஆம். 03.04.2012 ம் தேதி மனு எண் 67/2012 ஆக விசாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுச்செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கின் வாதியை நான் எப்போது விசாரித்தேன் என்றால் 28.09.2012 அன்று விசாரித்தேன். சம்பவயிடம் சென்று விசாரித்தேன். சம்பவயிடம் என்பது வாதியின் வீடா அல்லது வாதியின் கணவரின் வீடா என்றால் வாதியின் வீடு. வாதியின் வீட்டு பக்கத்தில் உள்ள நபர்கள்

யாரையேனும் நான் விசாரித்தேனா என்றால் இல்லை. வாதியை விசாரிக்கும் போது இந்த மனு கொடுப்பதற்கு முன்பே அவருக்கு 2 வது திருமணம் நடைபெற்றது என்று எனது விசாரணையில் துலங்கியதா என்றால் இல்லை. நான் முறையாக விசாரணை செய்யாமல் மேற்படி வாக்குமூலத்தை பதிவுச் செய்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.